# அரிய கருத்து!





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# அரிய கருத்து!

வெளியீடு :
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655
மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதற்பதிப்பு : தைப்பொங்கல் 2014
பிரதிகள் : 300
அட்டைப்படம் : அமர்நாத் பனி லிங்கம்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025



ஸத்தியம் பேசு ஓம் தர்மம் செய் (1)

(ஸத்தியவாக்கைத்)

கருணையோடு இரு.

நாவை அடக்கு

"ஸத்தியம்பேசினால், தர்மம்நிலைபெறும்!"

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!"

நம்பினோர் கெடுவதில்லை!

தெய்வம் மனுஷ்யரூபேண!

தெய்வம் தோன்றாத்துணைவன்!

அடங்கு! அடக்காதே!

யத் பாவம் தத் பவதி!

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெய ராம் ஓம்!!!

அஹம்பிரம்மம், ஜெகம்பிரம்மம், அகமேனவ்வாம்!

ஜகம், பரமும், ஜீவர்களும் சிறிதும் இல்லை!!

உ



யாம் இருக்கிறோம் என்ற

எம் இருப்பை யாம்

உணர முடியும்! ஆனால்

எவரும்! எதுவும்! எமக்கு


அன்னியமாய் இல்லாமையினால்;

இதை (எம்மை) உணர்த்த முடியாது.

ஆகவே இதை ஆதிபரீமஹான்கள் எல்லோரும்

பிரம்மரகஸ்யம்! எனக் கூறுகிறார்கள்.

இருப்பது ஒன்றே. நடப்பது நவமே. தேஜ பாபா.



இயற்கையின் தோற்றங்கள்!

சூரியன்/ சந்திரன்/ அக்கினி/ வாயு/ இவை மலைகள்/ சமுத்திரம்/ நதி/ ஆகாயம்/

பணிந்து வணங்கிறேன்

இயற்கையின் தோற்றங்களெல்லாம்

உன்னைப் பணியும்/ வாழ்த்தும்! உனக்கு ஆவன செய்யும்.

வினை & விதி! சாதகமாய் அமையும்.

— குழு பாபு



4

பொறுமையே கவசமாக கொள்ளவும்.

பணிவே பாதையாக ,, .

கனிவே வாக்காக ,, .

எல்லாம் நீ உயிர் மூச்சாக ,, .


நம்பிக்கை & வைராக்யம் துணை கை கொள்ளவும்.

எல்லாம் நலமே என்பதை

இல்லறவாழ்வாக கொள்ளவும்.

உங்கள் சாதனை ஆனந்தமே

5



ஹரேராம், ஹரேராம்,


ராம், ராம், ஹரே, ஹரே!

ஹரே கிருஷ்ணா!!!!!

ஹரே கிருஷ்ணா!!!!!

கிருஷ்ணா, கிருஷ்ணா!

ஹரே, ஹரே!!!!!



6

கருத்து :- முந்தையதாக ராம்

மந்திரமும், பிந்தையதாக கிருஷ்ண

கூறப்படுகிறது. இவ்விரண்டுமே

" கலிதோஷ & வக்ர

குணங்கள் நாசம் செய்வதாகும் எனஉணர்க.

பிந்தையது :- கலிவக்ர தோஷ குணங்களை

நாசம் செய்யும். முந்தையது :-

அப்படி நாசமான குணங்கள் உள்

பழக்க வழக்க தோஷத்தால் மீண்டும்

பற்றாமல் தடை செய்யும். — த இபாலா

7



ஸ்ரீ போட்டால்
அது நாமம் ஆகும்.
ஓம் போட்டால்
அது மந்திரம் ஆகும்.

குறிப்பு!

ராம்/ கிருஷ்ண// ஆகிய

இவ்விரண்டு மந்திரங்களுக்குமட்டுமே

ஹரே/ஹரே//என்று

அலறி அழைக்கும் உரிமையை

அனுபவ ஸ்ரீமஹான்கள் கொடுத்தார்கள்.

மற்றும் அனைத்து மந்திரங்களுக்கும் யோகமாயா!

நிலையில் ஸ்ரீ/ யோகமாயா நிலையில் ஓம்/ கொடுக்கப்பட்டது.

ஞான பரம்.



அஹங்கார,
மமகாரத்தோடு,
வாழும் வாழ்க்கையானது
வினைவிதியின் சோதனை
வேதனை கதைகளோடு கூடியதாகும்.

பிராணன் (உயிர்) இல்லாமல்
எப்படி சஞ்சாரம் செய்ய முடியாதோ;
அப்படி இறை நம்பிக்கை!
இல்லாமல் உன் வாழ்வு! கூடாது.
வாழ்வு வாழ்வாகாது என உறுதி செய்.
அப்படி நம்புவது உன் பணி
உனக்கு (அவன்) கை! கொடுத்து!
காப்பது அவன் கடமை!




இங்கும் சிவ ⑨ நாமம் நிறைந்ததாகவும், கிருஷ்ணநாமம் நிறைந்ததாகவும் கூறப்படுகிறது. நிறைவு தருவது கிருஷ்ண நாமம் ஆகும். அப்படியே நிறைவுறச் செய்வது சிவ நாமமாகும் என உணர்க.

அர்ப்பணம்! என இணைக்கூடிய நிலையில்,
சிவார்ப்பணம்! என்றும்,
கிருஷ்ணார்ப்பணம்!"
இருநிலைகளை ஞானிகள் கூறுவர். இங்கும் வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்! எனச்சொல்லும்,
தோஷ குணங்கள்! சர்வ நாசம் செய்வது கிருஷ்ணார்ப்பணம்
என்றும், அப்படி நாசமான குணங்கள் திரும்ப பற்றுமலிருக்கச் செய்வது, சிவார்ப்பணம்!
என்றும் உணர்வால் உணர்க. காரணம் ?????



ஓ கிருஷ்ணா!
நாமமும்
வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்!
கலந்த ஓர் விஷமுள்ளென ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

கிருஷ்ணா நாமமானது!
வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்! என்னும் (மண) விஷ
முள்! கலந்து நாசம் செய்யும்;
மற்றோர் விஷமுள்! ஆகும் என உணர்க
சிவ நாமமானது! நாம ரூப ஜீவ
குண தோஷ விஷ முள்ளை! எடுத்த
(மன) இடத்தில்; விஷத் தன்மையை நன்றாக
கழுவி சுத்தப்படுத்துவதாகும்
என ஸ்ரீ மஹான்கள் சொல்லினர். தி. ஜெயராம்.



நாமரூப பேதத்தால், விருப்பு வெறுப்பு, விருப்பு வெறுப்பால்

குற்றம் குறை, குற்றம் குறையால்

புண்ணியபாவம், புண்ணியபாவத்தால்


ஜனனமரணம், உண்டாகிறது.

இவைகள் நாசமாக வேண்டுமானால், முதலில்

சர்வார்ப்பணத்தால், சாந்தி செய்.

பிரம்மார்ப்பணத்தால்,

சர்வநாசம் செய். உன்னால் முடியும்.



12

தன்னைத்தான் காக்கின் சினம் காக்க.

கா...... வா...... க்...... கா...... ல்,

தன்னையே கொல்லும் சினம்.

ஒருவன் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் 'வஞ்சக, விரோத, குரோத, சினம் (தடும், சுடும் விஷ) என்ற சர்ப்பம்! தீண்டாமல், ஸ்ரீபகவத்! உணர்வோடு தம்! சொல்லையும், செயலையும், பாதுகாத்துக் கொள்வாயாக. அப்படி உன்னை நீ! பாதுகாக்கவில்லையானால்!



13

அக்கொற்ர குணங்களே! உனக்கு

உன்னை சொல்லும் ஜாக்ரதை.

காலனைகமுடியும்! (செய்தால்)

எண் அற கற்று; எழுத்து அற வாசிக்கவும்;

பெண்புத்தி பின்புத்தி! ஆகும்.

இதற்கு முன் உதாரணமாக சொல்வது

கற்க, கசடு அற, கற்பவை

கற்றபின், நிற்க! அதற்குத்தக.

இவ்விரண்டு குறள்களுக்கும் இணைந்த பொருள்.



0 நீதியின் 14 கண்ணுக்கே சைபரின் மஹிமை தெரியும். அநீதியின் கண்களுக்கு சைபர் மஹிமை தெரியாது.

எண்களை எல்லாம் படிக்க வேண்டுமென்பதல்ல.

(எல்லா) எழுத்துக்களை ,, ,, ,,

எல்லா பாஷைகளும் இதில் பொருந்தும்.

குற்றம் குறை, தப்பு தவறு, பழிபாவம் / முதலியன

நீக்கிக்கல் / நீங்கக்கல்!!

எண்கள் அற்ற இடம் 0 சைபர் ஒன்றே!

அதுவே ஆதி அந்தம் அற்ற இடமாகும்

மற்றும் எண்களும், எழுத்துக்களும், படிக்க படிக்க

100/100 என மார்க்! வாங்கி, பட்டம், பதவி, பணம், அந்தஸ்து, கௌரவம், புகழ் என வாங்கி,



நீதிக்கு ஒரே கண்! அந்திக்கு ஆயிரம் கண்கள் ஆகும்.

உலகில் உயரவும், உன்னை அழிக்கவும்! பயன்படுவதாகும். ஆனால்?

எண்ணிலும், எழுத்திலும்! 0 வாங்கினால்;

பரம்பூஜ்யம் என்ற நிலையில்;

ஆதி அந்தமற்ற சீரோ ஆகவாம். இங்கு

வெண்! என குறிப்பிடுவது பெண்! அல்ல.

சபலம், சலனம், சந்தேகம், என்ற முக்குணமாகும்.

இந்த முக்குணமும் எங்கு பொருந்தியிருக்கிறதோ,

அதுவே பெண்! என்ற நாமரூபம்! ஆகும்.

16



பின்புத்தியென்ற மந்தபுத்தியல்ல எனஉணர்க

சபலம், சலனம், சந்தேகமற்ற நிலையில் ஒரு பக்குவ ஆன்மா இருந்தால்; பின்புத்தி என்றால் சூர்ந்த அறிவுடைய! பக்குவ ஆன்மாவாகும் என உணர்க.

ஆ.......... க.......... வே?

நாமரூப ஜகஜீவ தோற்ற இயற்கை இயக்கத்தில்; பேதம் & விருப்பு வெறுப்பால் தோன்றும் குற்றம் குறைகள் நீங்கத் கற்பதும், நீங்கிக் கற்பதும்; கற்றபடி நிற்ப ஒத்து தும்தான் கல்வி கற்றலாகும்! மற்றும் அனைத்தும் உடல் உலக படிப்பாகும் — த பாபா



இருப்பது இருக்கட்டும்!

நடப்பது நடக்கட்டும்!

கிடைப்பது கிடைக்கட்டும்!

வருவது வரட்டும்!


போவது போகட்டும்!

முடிவது முடியட்டும்!

என இறை உணர்வோடு

இருப்பவன் எவனோ அவன் அறிவாளி


அறிவோடு ஆழ்பவன் ஆகிறான்.



18

# சர்வார்ப்பணம் ஏன் செய்ய வேண்டும்?

1. நான், எனது என்ற ஜீவ கர்த்ருத்வம் நாசமாக வேண்டும்.
2. அறிந்தோ, அறியாமலோ, செய்யும் வலிய கர்மபலன் சுகமாக முடிய வேண்டும்.
3. பிராரப்த கர்மா சுக கர்மாவாக முடிய வேண்டும்.
4. மனம் பக்குவப்பட்டு, உயர்த்தப்பட்டு ஜீவன் முக்தி பெற ஏதுவாக வேண்டும்.
5. பரமாத்மாவும், ஜீவாத்மாவும், ஒன்றாக வேண்டும்.



19

(1) பேதம் களைதல் :- ஒருவன் இருப்பே. ஒருவன் பொருளே. ஒருவன் இயக்கமே. என ஓர்ந்தால், பேதம் நாசமாகும்.

(2) விருப்பு வெறுப்பு அற்றல் :- வினை விதியின்படி இருப்பதிலும், கிடைப்பதிலும் இவ்விரண்டையும் வைத்து நடப்பதிலும், போதும் அறைவார்ண திருப்தி அடைந்தால் விருப்பு வெறுப்பு நாசமாகும்.

(3) குற்றம் குறை நாசமாகுதல் :- ஜீவர்களின் உலகம் என்பது, திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியும், விதிநாடகசார நியதியும், பாரப கூடமில்லாமலும், நடைபெறுகிறதென உணர்ந்தால் குற்றம் குறை நாசமாகும். - தஜ பாவா



௨௦

ஸ்ரீ பகவான்! என்பவன்

வேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை!


அற்றவன்! ஆணைப், அவன் கைத்!

கருவியாகிய மாயாவோ! இம்

மூன்றும் உடையதாகும். அதாவது;

சிருஷ்டி! ஸ்திதி! ஸம்ஹார கர்த்தாவாகும்.

ஸம்ஹாரம் என்றால், நாமரூப மாற்ற மறையாகும்



21

# பக்திக்கோ? முக்திக்கோ??


சாதனை செய்பவர்கள் ஸ்ரீபகவானை மட்டும் சரண்புகுந்தால் போதும்.

ஸ்ரீபகவானின் மாயா ஆவன செய்யும்.

மாயா செய்வதையே, ஸ்ரீபகவான் செய்வதாக உபசாரமாக பேசப்படுகிறது.

குறிப்பு:- ஸ்ரீபகவான் சைதன்யமாக இருப்பதால் செயலற்றவன் ஆகும்.

குருபாபா




22

(1) தனிக்கவைப்பான் :- உன் வினையை அனுசரித்து, உன்னை நாமரூப பொருள்களிலிருந்தும், உறவு சுற்றங்களிலிருந்தும், விலக்கிய நிலையில் தனிக்க வைப்பான். இங்கு, மறை அவஸ்தையும்! தால அவஸ்தையும்! சற்று கடுமையாக இருக்கும் என்பதை உணர்க.

(2) தவிக்க வைப்பான் :- இது தால! வாழ்வுக்கும், ஆன்ம! சாதனைக்கும் உள்ள போராட்டம்! ஆகும் என உணர்க. இது அறிவு க்கு உள்ள ஓர் பரீக்ஷையாகும்.

அதாவது?



23

மனதின் இன்ப துன்பத்திற்கும்! அறிவின்

ஆனந்தத்திற்கும் சக்தியால்.

நடைபெறும் பலவீ பரிக்ஷையாகும்.

3 இயலாத்தன்மையை கொடுப்பான்:

A உலகியலில் நிற்க முடியாது.

B பக்தியில் நிலைத்து ,, ,, .

ஜபதபம் ஆச்சார அனுஷ்டானத்தில் நிற்க முடியாது


எல்லாம் மறந்து & மறத்து போகும்

அ............ ங்............ குறை

எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! நாமே!

நிறைந்திருக்கிறோம் என்ற நிலை வெற்றியும்.

தருபவர





# நண்பனும் பகைவனும் உன் உள்ளே!


**A நண்பன் :- அறிவாகும்!**

இறை குரு உணர்வோடு, எண்ணம் சொல் செயல் இம் மூன்றிலும் சர்வ சதா இருத்தல். மேலே கூறிய மூன்றிலும் பொறுமை! பணிவு! இவைகளே ஏற்றல்.

**B பகைவன் :- மனமாகும்!**

ஆத்திரம்! அவசரம்! வேகம்! படபடப்பு! விரோத குரோதம்! போட்டி பொறாமை! எதிர்பார்ப்பு மூர்கவனம்! மோஹாவேசம்! இந்த ஒன்பதும் உன் எண்ணம், சொல், செயலில் வரவாகுது. வந்தால் மனமாகும்.

ஸ்ரீ பாபா



25

வல்லான் வகுத்ததே வாய்க்கால்!!!

ஒவ்வொரு ஜீவனுக்கும் அதன்

(வாக்கே) வாயே விதைவாசல்! ஆகும் என உணர்க.


நம் நாவால் சொல்லும் ஒவ்வொரு சொல்லும்

வினைவித்திற்கு செல்லும்

வாய்க்கால் வழியே"

ஐயமாகும்! எனவுணர்வால் உணர்க.

அடங்கு. அடங்காதே. இது பாபா.



26

திறம்பட நட!

நன்முக ,,

பயமில்லாமல் ,,

சந்தேகமில் ,, ,,


வேகமில்லாமல் ,,

கலங்காமல் ,,

இறை & குரு

உணர்வோடு ,, ஆதல்

நான்/எனது என மயங்கிவிடாதே.



27

இதை நோக்கும் போது, உனக்கு
ஓர் சந்தேகம் எழவாம் ???

கொடூர செய்கைகளையும், பழிபாவங்களையும்
செய்ய வேண்டி வருமே அங்கு என் செய்வது?

இறை & குரு / உணர்விருந்தால் !!

உன்னை அவ்வாறு செய்ய முடியாது.

ஸ்ரீ பகவானின் மாயா! உன்னை கண் காணிக்கும்.

அவ்வாறு! உன்னை செய்ய முடியாது.

அது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!! இயலாது. தருக்கும்.

கு பரமா



28

# ஸ்ரீபகவான் வாக்கியம்!

ஓர் ஆத்ம ஞானிக்கு கொடுக்கும் விளக்கம்.

உன் ஒருவனுக்காகவே யாம்!
இவ்வுலகை வைத்திருப்போம்!
இருப்பும், இயக்கமும், உடையதாக
செய்வோம்! இது பிரமாணம் உண்மையாகும்.
(அது எம்மாயாவாகும்)

சாமான்யன் வினை விதியை நம்புகிறான்.
" நான் என்பதை " .
" நாமரூபத்தை " றான்.
ஓர் ஞானி பரமும் ஸ்ரீபகவானும் ஒன்றென உணர்கி
அதனை எம்மாயா! அந்த ஞானிக்காக உலகை இயக்குகிறது.



29

இது வாசிஷ்டத்தில் ஸ்ரீவசிஷ்டர் வாக்கியம்.

ஞானத்தின் சலனசக்தியே மனம் ஆகும்.

சலிக்கின்ற அம்மனமே ஜகம் ஆகும்.

சலனமற்ற மனம் நசிக்கும்.


A ஞானத்தின் நிழலே மனம் ஆகும்.

B மன எண்ணமே ஜகம் ஆகும்.

C எண்ணம் மறந்தால்!

மனமும் இல்லை. அதனால் ஜகமும் இல்லை.

எண்ணம் மறப்பதற்கு?



ஒருவன் (ஸ்ரீபகவான்) தானடா

எல்லாம் ஒன்றேஎன ஒன்றில் ஒருங்கு

போக்குவரவில் மயங்காதே.

வந்து, இருந்து, மாறி, மறையும்


நாமரூபங்களை நம்பாதே

இருப்பதையும், நடப்பதையும், நலமாகவே நம்பு

தீமையும், தீயவர்களும், தீயவைகளும் இல்லையெனவே ,,

எங்கும், எதிலும், உன் இருப்பை உணர்வாயாக.

கலை பாபா.




(31)

த்வம்பதம் என்றுவ்
கூடஸ்த பிரம்மம்.
அதாவது மனக்கூண்டுக்குள்
அடைக்கப்பட்ட பிரம்மம்.
மனக்கூண்டு நான் எனது.
தத்பதம் என்றுவ் எத்தட்டுகளும் இல்லாத

சர்வார்ப்பணத்தால் / தத்துவஞானம்.
தத்துவஞானத்தால் / வாஸனாக்ஷயம்.
வாஸனாக்ஷயத்தால் / மனோநாசம்.
மனோநாசத்தால் / ஜீவன்முக்தி இயல்பாகும்.

(1) சர்வார்ப்பணம் :— ஜீவன் இருப்பாகிய அதாவது ஜீவகர்த்ருத்வமாகிய நான் / எனது / நாசமாகி எல்லாம் நீ / எல்லாம் உனது / என்ற ஈச / கர்த்ருத்வம் ஸ்திரமாகும் போது சர்வார்ப்பணமாகும்.

(2) தத்துவஞானம் :— தத்துவஞானம் என்றுவ்; த்வம்பதலக்ஷிய




உபாதிபேதம்:— (32)

பரமாத்மா அரசன்
ஜீவாத்மா தளபதி. இந்த
அரசனும், இந்த தளபதியும்
தொழிலால் பேதமே தவிர,
மனிதன் என்ற இருப்பில் இந்த
பேதமும் இல்லாதது போல, தொழிலால் பரமாத்மாவும்
ஜீவாத்மாவும் பேதமேயன்றி இருப்பில் பேதம் இல்லை என அறிக.

ஜீவனும், தத்பத லக்ஷிய ஈசனும்,
உபாதி பேதத்தால் பேதமேயன்றி, இருப்பில்
ஒன்றே என ஐயம் திரிபுற உணர்ந்து விட்டால்,
தத்துவ ஞானமாகும்.

(3) வாஸனா க்ஷயம்:- வாஸனை என்ற
குணதோஷம் நாசமாகும் என அறிக.
அதாவது தோற்றம், இருப்பு, மாற்றம், மறைப்பால்
எண்ணமில்லா தன்மையால் மயக்கம் கலக்கம் இராது.
அது வாஸனா க்ஷயமாகும்.

(4) மனோநாசம்:- எண்ணத்தால் தோன்றிய மனம்,
தேய்ந்து, தேய்ந்து, தேய்ந்து, தேய்ந்து வந்து,
பிரம்மார்ப்பணத்தால், மனமும்
எண்ணமும், பிணஞ்சுடும் தடிபோல் சிவநாசமாகும்.
மனோநாசத்தால் ஜீவன்முக்தி இயல்பாகி ஆகும்.
இது மனோநாசமாகும். — த ஞ பாபா.



33

பரத்திற்கும் ஆதியும், அந்தமும், இல்லை.

(1) திரிகர்த்தாக்களும், வந்ததும், மறைந்ததும் இல்லை.


இருக்கிறோம், என்ற ஓர் இருப்பை, மட்டும் உடையவர்கள். ஆகவே அவர்கள்,

பர அம்ஸமாகவே இருக்கிறார்கள். (ஆதி அந்தமற்று)

(2) ஜீவாத்மாவாகிய நாம், இனி,

உடலால்தான் பேதமே யன்றி

இருப்பில் பேதம் இல்லை, அத்துவமானது,




ௐ

து

காணல் நீர் போன்று; வந்து இருந்து
மாறி மறையக் கூடிய
மாயாவின் காரியமாகும்.
நான்! எனதாவ்/ மட்டும் இருப்பு தோற்றுகிறது.
" எனது! மறை மயக்கம் ஆகும். இருக்கும்
" " நாசமானவ் தாவலும் மண்ணாகி
இருப்பில் நாம் பரஅம்பலமா
கவே! இருக்கிறோம். எல்லாம் மண்
மயபரமாக! உணர்ந்து விட்டால் நமக்கும்
ஆதி அந்தம்! இல்லவே இல்லை.

பாபாம்

35



படிப்பற்று, கேள்வியற்று, பற்றற்று,

# நெஞ்சம் துடிப்பவர்க்கு தான் ஆனந்தம் ஸாத்தியமாகும்!

(1) படிப்பற்று:– உடல், உலகத்திற்காக படிக்கும் பாடம் படிப்பு வேண்டாம்.

(2) கேள்வியற்று:– நாமரூப சம்பந்த கேள்வி வேண்டாம். (ஸத்தான விளக்கம் சிவகாமம் வேண்டும்)

(3) பற்றற்று:– நான் எனதற்று!

(4) நெஞ்சம் துடிப்பவர்க்கே:– உருக்கம், ஊக்கம், ஏக்கம்! கண்ணீர் பெருந்த இதய குழைவு! உள்ளவர்க்கே


(5) ஆனந்தம் உண்டு:– இருமையற்ற, ஓர்மையான ஆனந்தம் நிலை பெறும்.

— ஸ்ரீ பாபா.



# இகட உணர்வு

நாமரூப, ஜக, ஜீவ, தோற்றங்கள்
மனித இனம் உட்பட எல்லாம்
பதுமைகள்! நிஜயில் கூட்டம் கூட்டமாக வினைவிதி
என்ற கற்பனை நூலில் பின்னால் பிணைக்கப்பட்டு,
உலகமாகிய நாடக மேடையில்
வந்து, இருந்து, விளையாடி, மாறி, மறைந்து விடுவதா
போவதிலும் வருவதிலும்!!
மயக்கம், கலக்கம், சந்தேகம், பயமில்லாமல்!
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே என மெய்
உணர்வோடு உணர்ச்சிக்கு அடிமையாகாமல் இருப்பாயாக.




37

தோற்றத்தில் பெயரும்!
பெயரில் தோற்றமும்!!

ரூபத்தில் நாமமும்! நாமத்தில் ரூபமும் மாயாவினில்
மாறி மாறி அமைவதால்! மனம்
குழப்பி குழப்பி குணங்கள்
பின்னவிட்டு இச் ஜீவர்களை அலைக்கழிக்கிறது.
அதுவே இன்ப துன்ப! பிணைப்பாகவும்,
" ஜனன மரண! பிணைப்பாகவும்,
அமைகிறது என உணர்க.

ஸ்ரீ பாபா



38

இ..........ங்..........கு?

# கண் இருந்தும் குருடாய்!
# காது ,, செவிடாய்!
# வாய் ,, ஊமையாய்!

(1) எல்லாம் நலமே எல்லோரும் நல்லவரே எனகாண்பவ்


(2) அனர்த்தமாககேளாமல் இறைஅர்த்தமாக கேட்டல்.

(3) இறை & குரு உணர்வோடு அடங்கி பேசுதல்.

பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை றயாத

# காணாமையும்! புறணிபேசாமையும்!
# எதையும்! எவரையும் அடக்காம.

அடங்கி இருந்தால் நீ ஜீவன் முக்தனே. — தஜவாவா.



39

வினை விதியால் அனைத்து
நாமரூப ஜக ஜீவ தோற்றம் எல்லாம்
இன்பதுன்பத்தால் ஆடி களிக்கின்றன என்றும்
அகலை (வினை விதி) கழிகின்றன என்றும்
இவை அனைத்தும் உடல் உலகிற்கே!
அவை நாமும் அல்ல. நம்முடையதும்
அல்ல. அவை கானல் ஜலமே! என்று
ஜலம் போல் தோற்றும் தாகசாந்தி பண்ணமுடியாது.
பேரிடி விழுந்தாலும், உலகம் நிலை பெயரினும்
எல்லாம் மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே!
என்ற திட உறுதியுடன் இருப்பாயாக.



ராஜகிரீடையும், ஜலக்கிரீடையும், முறையே மண்ணிலும் ஜலத்திலும் நடைபெறும் கர்த்ருத்வம் நாசமாகி பரப்பிரம்மம் ஐக்கியம் ஆகும் விளையாட்டாய் இரு விளையாட்டுகளை உணர்த்தும். (40)

ராஜகிரீடைக்கு ஜலக்கிரீடைக்கும்

இது பரமாத்மாவுடன் ஜீவாத்மா கலப்பதா

அ..........தா..........வு..........து?

பரமாத்மா ஓர் அரசன் ஆகும்

ஜீவாத்மா ஓர் படைஞன் (தளபதி)!

அந்த அரசனானவன் தமது அரசமகுடம், செங்கோல், சிங்காசனம், மற்றும் ஆடை அணிகலன்களை துறந்த நிலையில் சாமான்ய மனிதனே ஆத்மாவே



ஓ! தரையில் நடை பெறும் ராஜ கிரீடையால் ஜீவகர்த்துத்வம் நாசமாகி மஹேபத்துவம் ஒளியாகும் என உணர்க.

அ......... தே......... போ.........ல்!


இந்த படைகுனைவன்! தமது படைக்கலன்கள்! அதாவது வாள்! கேடயம்! ஈட்டி! குத்துவாள்! கத்தி! ஆகிய படைக்கருவிகள்! விட்டு நீங்கியவும் சாமான்ய மனிதனே! ஆத்மாவே ஆகும்.

அதாவது அரசனுமல்ல. படைகுனுமல்ல.

,, பரமாத்மாவுமல்ல. ஜீவாத்மாவுமல்ல.

ஒன்றான ஒரே ஆத்மாவே!


இது ஸத்தியம் ஸத்தியம் ஸத்தியம்.



ஜலத்தில் நடை 42
பெறும் ஜலக்
கிரீடையால் ஈசகர்த்
ருத்வம் பக்குவப்பட்டு
ஜீவன் முக்தர்க்கு கதி!
உடையவன் ஆகிறான் என உணர்க.

பரமாத்மா! என்பவன் ஈசன் நிலையில்
முத்தொழில் கர்த்தாவாக இருப்பதால் அவன்
அரசன்! ஆகிறான் என உணர்க.

ஜீவாத்மா! என்பவன் ஜீவன் நிலையில்
குடும்பி என்ற ஸம்ஸாரியாக இருப்பதால்;
சொந்த, பந்த, பாச, பற்றில்!
பல பல ஆயுதம் தாங்கும் படைஞன் ஆகிறான்
இவ்விருவரும் மாயாசக்திகளில் இயங்கு
கர்த்ருத்வம் வகிக்கின்றனர். இதை கீர் நாசமாக்குவதால்,
ஆன்மாவாகிய பரமான்மா ஆகி, பரப்பிரம்மம் ஆகக்கூடியும் என
க ஜ பாபம். அறிக.



# கோ, கழி, ஆண்ட!

# குரு, மணி! தன் தாள் வாழ்க!

(1) கோ :— பசுத்தன்மையும்! அதைசார்ந்த பாசப் பற்றுயின் குணங்களையும்;

(2) கழி :— சர்வ நாசம் செய்து;

தன் திருவடியை கொடுத்து தடுத்து ஆட்கொண்ட ஸத்குருவின் திருவடிவாழ்க.


(3) ஆண்ட :— ஸம்ஸார ஸாகரத்திலிருந்து தடுத்து ஆட்கொண்ட.

(4) குரு :— ஸத்குரு என்ற;

(5) மணி :— உள்ஒளி பொருந்திய மாணிக்கமணி

(6) தன் தாள் வாழ்க :— திருவடியின் ஜொலிக்கும் திருவடி வாழ்க.

தஜ பாபா.



இறைவன்!

நன்மையும்! தீமையும்! பங்கயற் கோன்!

எழுதாப்படி வருமோ? எனசுவியா நிருஎம்!

ஏழை நெஞ்சே.

நன்மையும் தீமையும்! சுகதுக்கமாகவும்!

இன்பதுன்பமாகவும் இருமைகள்! நிலையால்

ஒருமை என்ற = ஆனந்தம்!

இவ்வா நிலையில் உண்டாகின்றன என உணர்க.

இது இறைவன் நமக்குஎழுதிய தலையெழுத்தென்று

உபசார வசனமாக கூறப்படுகிறது என உணர்க.

இவ்விருமைகளே துவைதபயம்! எனக்கூறப்படுகிறது.

இவ்விருமைகள் நாசமாக வேண்டும்.



45

இவ்விருமைகளை அனுபவிக்கும் போது;

சங்கடம், கஷ்டம், கவலை, பயம், துக்கம் வேண்டாம்.

எல்லாம் நீயே! எல்லாம் ஒன்றே!

" நலமே. " ஆனந்தமே.

எல்லோரும் நல்லவரே. எல்லாம் நல்லவையே!

மற்றும் இருமையாக தோன்றுவதனைத்தும்;

நம்மனதப்பனையே! என உறுதி கொள்.

சர்வார்ப்பணம்! செய்து நடையில்


இருமைகள் நாசமாகும். ஓர்மை பிரகாசிக்கும். நம்

தலையெழுத்து " . ஆனந்தம் " .

எல்லாம் ஒருவனே! என உறைப்பட்டுவிட் பாவி

பொல்லாத பவ, பயம் நாசமாகும்.

ஸ்ரீ பாபா.



அவரை! 46

முழுமையாக நம்பியவர்

எவரெவரோ!

அவர் அநுபவத்தாலும் தூல

சேவையாலும் முக்தராவர்

குடிலில் இருக்கும் பசுக்கள் அன்பர்கள்

(அவர்கள் கர்மாக்கள்) கணக்கு பார்ப்பதில்லை

போனா! பசுக்கள் (அவர்கள் கர்மாக்கள் வைத்தும்) ,, தேடுவதும் இல்லை.

ஆ○○○○○○○○○○○○○○ஹ○○○○○○○○○○○○○○ல்!

யாமே நல்ல மேய்ப்பன்! ஏண கூறா

இதன் காரணகாரியத்தை அவரே சொல்கிறார்!!

உங்கள் குருதேவர் காரண காரிய கர்த்தா இல்லை.

ஆனால் ,, ,, மஹாகாரணம்! ஆகும்.



உன் நம்பிக்கையே! 47

உன் { பலம் ஆகும்.
பலன் ,, .

வி.........ப.........ர.........ம்!

(1) லௌகீகம் :- காரியம்! ஆகும். அது மனம்! வினை! விதி! கர்ம காரியம் சம்பந்தம் கொண்டது. அது தூலம்! ஆகும்.

(2) தெய்வீகம் :- காரணம்! ஆகும். அது அறிவும்! ஏககுணமும்! கொண்டது என உணர்க. அது அறிவுக் கண்ணால் கண்டுணர்வதாகும். அது சூட்சுமம் ஆகும்.

(3) பரமார்த்தீகம் :- மஹாகாரணம்! ஆகும். அது பேரறிவாகும்! குணாதீதம் என்ற நிர்குணம் ஆகும். தாம்தாமான! நிலையாகும் என உணர்க.



48


ஆகவே அவர் எந்த அன்பர்களையும் கண்டிப்பதும், தண்டிப்பதும் இல்லை. அவருடைய கண்காணிப்பே திவ்விய திருஷ்டியே போதும் என உணர்க.

(1) குடிலுக்கு வரும் அன்பர்கள் அனைவரும், தலம் தாங்கி வருவதால் வினைவிதி, எப்படியோ அப்படி வருவதும் போவதும் உண்டு. ஆகவே வருவதையும் போவதையும் கண்டுகொள்வதில்லை.

(2) அவர்களுடைய அறிவு, அவர் வசம் இருப்பதால், அவர்கள் எங்கிருந்தாலும் (கண்டிப்பும், தண்டிப்பும்) இல்லாமல் கண்காணித்து வழிநடத்தமுடியும் என உணர்க. அவர்பார்வையிலிருந்து தப்பமுடியாது.

(3) அவர்களே அவராகவும், அவரே அவர்களாகவும், அவரே எல்லாமாகவும், இருப்பதால் அவர் போதனையையும், அவர் சேவையையும், முழுமையாக அறிந்தவர்கள் ஜீவன்முக்தரே.


த ஐபாபா




# கண்காணித்தல்:-

கண்காணித்தல் = கண் கணித்தலாகும். அதாவது அறிவுக்கண்ணானது சாட்சியில் ஒருவனுடைய கர்ம காரியங்களை மனம், வினை, விதி இவைகளை வைத்து சரியாகச் செயல்படுகிறதா?? என சரிபார்க்கும் நிலை ஆகும். இது லோக மாயாவின் காரியமாகும். ஸ்ரீபகவான் என்ற சைதன்யத்தோடு மாயா இணைந்து தொண்டு செயல்படுவதாகும். ஸ்ரீபகவானிடம் சரண்புகுவோரை மட்டும் கடுமை கொடுமைகளை தளர்த்தியும். முன்பின் மாற்றி அமைத்தும் மாயா சகாயம் பண்ணும் என அறிக.

தி. உ. பாபாக



கண்ணால் நேருக்குநேர் கண்டதையும்,
காதால் ,, கேட்டதையும்,
உண்மையென்றுநம்பி ஒருவருக்கொருவர்
பேசிவிமர்சனம் செய்வது என்பது
புறணிபேசுவதாகும், அதைசெய்யலாகாது.
ஒருவர்வினைவிதியை, ஒருவரால்
காணவோ? அறியவோ? முடியாது. இயலாது.
அப்படி கண்டதையும், கேட்டதையும், சொன்னால்,
அவர்மனதை புண்படுத்திதெடுக்கிறோம். அங்கு
நீயும் மனம் கெட்டுநாசம்அடைந்து.
வினையையும்பெருக்கிக்கொள்கிறோம்,
திரு பாபா. என உணர்க.



51

மாற்றிப்பிடிக்க (மாற்றிப் பார்க்க இயலாது)

வகையறியாமாந்தர் (அன்பர்கள்)

செய்த தவம் (அன்பர்களின் சாதனைகள்)

ஆற்றில் (ஓடும் ஆற்று ஜலத்தில்)

கரைத்த புளியெனப் போகும்!

(மூட்டை மூட்டையாய் புளியை கரைத்தாலும் பயன் இல்லை)

பொருள்!

விபரம் தெரியாத் தன்மையால்!

(அஞ்ஞானத்தால் அதாவது நம் கவனக் குறைவால்)



52

அதாவது ஸ்ரீபகவான் பொருள்

அவன் பொருளையும், அவன் இயக்கத்தையும்

நான் எனதாக கற்பனை செய்து

புகுத்ததில் வந்ததே இவ்வுடல்.

புண்ணிய பாப ஜனன மரண இவ்வினை மூட்டையாகும்.

இக்கற்பனையை பாவனையாக மாற்ற வேண்டும்.

அதாவது நான் எனது!!! எல்லாம் நீ உனதாக மாற்றி பாவனை செய்து பழகிக்கொண்டால் போதும்!!! என்ன நடக்கும் தெரியுமா???



உன் ஒருவனுக்காக இவ்வளவுகளையும் (53) திருப்புவோம். இயக்குவோம் என்று பரிபகவான் கூறும் வாக்கு இங்கு வைத்தியமாகும்.

(இது இந்த ஏழையின் வைத்தியத்தின் அனுபவம்)

மனம் மாறும். வினை மாறும். விதி மாறும். அதாவது ????

குடும்பம்! தொழில்! உறவு! சுற்றம்!

பற்றுவரவு! பாசம் பற்று! குண தோஷங்கள்!

வேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறைகள்!


முற்றவனம்! (அதனை விளையும்) போட்டி பொறாமை!

அனைத்தும்! உன் ஒருவனுக்காக மாற்றி அமைக்கப்படும்

உன் ஒருவனுக்கே தெரியும்.

ஏனையோர் அறியார். அறிய முடியாது. இது சத்தியம்.

சூ பாபா.



வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
தினை ,, தினை ,,.

வினைப் போகமே ஓர் திரேகம் கண்டாய். வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்.

சமீபத்தில் ஓர் மாற்றம் உண்டாகிருக்கிறதை உணர்க.

முன் செய்த புண்ணியபாபத்தின்படியே இச் ஜன்மா அமைகிறது என்பதை உணர்மை.

இப்போது இந்த ஜன்மாவில் செய்த புண்ணிய பாபத்தின் விதைகள், அடுத்த ஜன்மாவுக்காக விதைக்கிறோம்!

அடுத்தஜன்மாவுக்காக விதைக்கிறோம் என அறிக.



ஒரு சில 55
அல்பமான
வினைகளை மட்டும் இச்ஜன்ம
பிராரப்த தீர்த்தாக நினைக்கப்பட்டு விடுகிறது.


கா.........ர..........ண..........ம்???

இக்கலியுகம் அ வ ச ர யுகம்! ஆம்:

சீக்கிரம்! சீக்கிரம்! சீக்கிரம்! என்று சீக்கிரமாக முடியும்.

முடிக்கும் யுகம்! என அறிவால் அறிக.

அசுரவேக அவசரயுகமாக இருப்பதால் தாமதம் செய்ய, அதாவது ஓய்வெடுக்க ஓய்வு நேரம் இல்லாமையால் இப்பாருலகில் பெரும் பிரு உலகிலும்! தங்கி



இளைப்பாற நேரமில்லை என உணர்க. 84

லக்ஷம் ஜீவ கோடிகளின் மனிதனும் உட்பட

கருவறையிலும் புகுந்து புகுந்து

வெளிவரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது

என உணர்க. உழைத்து உழைத்து உருக்குலைந்து

போக வேண்டும் என்பதே கலியுக நியதியாகும்.

அவசரந்தான் பெருகும் கர்மாவோ அதிஅதிகம். ஆகவே

ஏற்று வந்த கர்மாவை சீக்கிரம் முடிக்க வேண்டும்.



57

என்ற அவசர அசுர புத்திகொண்டு

ஜனனமரண புதைசேற்றுக் குழியில்;


விழுந்து எழுந்து; விழுந்து எழுந்து படும்கடும்

அவஸ்தையை பெரும் சாதனையாக

கலியுக மனித ஜீவன் இன்பமாக கொள்கிறான்.

ஆனந்தப் அனுபவமாயும் விடு

ஒவ்வொரு ஜீவனும் நடைமுறை வாழ்வில்.



58

காம, மோஹ, போஹ,

வெறியோடு! வெறித்தனமாய் அலைவதை இன்றும் காணலாம்

குறிப்பு:— புழு பூச்சிகளும், பறவை மிருகங்களும் ஒன்றை ஒன்று விரட்டி அலைவதைக் காணலாம்.

கலி என்றாலே கலிக்கும் பெருக்கும் பெருகும் யுகம் எனஞானிகள்கூறுவர்.

இங்கு விதியின் வழியே மதி செல்லும் என்றாலும்,

விதியை மதியால்! இறைகுரு உணர்வால் மாற்றி (அறிவால்) அமைத்து, சாதகமாக ஆக்கலாம்

எனவே இதை நிறைய செய்வோம். பாபா.



59

மெய்மை
எண்ணும் போது
அது பாவனை ஆகிறது.
பொய்மை எண்ணும்
போது அது கற்பனை ஆகிறது.
முந்தையது நிதானம்
பிந்தையது அவசர அசுர வேகம்.

மெய்யன்பர்களின் நிறைவு!
அன்பு உணர்வின் அன்பான
குழந்தைகளோ! நம்பினோர் கெடுவதில்லை!
என்பதையும் யத்பாவம் தத்பவதி! என்பதையும்!
உள்ளே உணர்வால் உணர்ந்தால்
போதும்! அவர் ஜீவன் முக்தரே!!
அனேகர்! அவரவர் ஏற்று வந்த
கர்மாவை மடக்கும்!
தருணத்தில் இருக்கின்றனர்.



இ பயந்த 60

கற்பனையை நாசம் செய்

ஆகிவிட்டோம்

என்ற உணர்வில் உறுதியாக ஒன்று.

நீ..ஜீ..வ..ன்... மு..க்..த்..னே.

ஒரு சிலர் மட்டும்!

ஏற்று வந்த கர்மாவை முடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களும் முடித்து விடுவர்.!

சந்தேகம்! மயக்கம்! கலக்கம்! பயம்! வேண்டாம்.

நம்புவது உன் பணி(வு) ஆகும்.

கைகொடுத்து காப்பது

அதுவாகிய அவன் கடமையாகும்.

எல்லாம் ஒன்றே. அதுயாமே! அது நீங்களே!!

இருப்பது ஒன்றே.

நடப்பது நலமே.

த ஓ பாபா.



61

# மஹாவாக்கிய ரகஸ்யம்

ஹிமாலயாவிலிருந்து ஸ்ரீ ஸ்ரீமஹாத்மா வந்தார்

ஸ்ரீமஹாத்மா :— பிரணாம் பாபாஜீ.

வைத்தியம் :— நாராயணா! நாராயணா!! நாராயணா!!!

என கூறி அவரை வரவேற்றது அவ்வைத்தியம்.

பின் ஒருவருக்கொருவர் ஸ்ரீபாத நமஸ்காரம் செய்து கொண்டார்கள்.


ஸ்ரீமஹாத்மா :— அன்பான பாபாஜீ! ஓர் சிறிய விளக்கம் தேவை? ஆனால் மஹத்தான கேள்வி பாபா?

வைத்தியம் :— பரவாயில்லை. கேளுங்கள்.

பிரம்மரகஸ்யம்தானே!

ஸ்ரீமஹாத்மா :— அதெப்படி பாபா உங்களுக்கு தெரியும்?

வைத்தியம் :— இங்குதான் ஓர் திருடன் (கண்ணன்) இருக்கிறானே. அவன் மூலமாக உணர்வோம்.



62

ஸ்ரீமனோரஞ்சமா:— அவன் திருடன்! அல்ல.


பாபா. அவன் மஹாமரடன்! ஆகும்.

பாபா. 'எப்படியோ உம் வசம் அகப்பட்டுக் கொண்டான் என்றே சொல்வோம். ரும்.

வைத்தியம்:— அவன்! விஷயம் இருக்கட்டும் தாங்கள் கேள்வி என்ன மனோரஞ்மா??

ஸ்ரீமனோரஞ்சமா:— ஹேபாபா! ஜீவன்முக்தி என்ற பிறவா நிலையானது 4 மஹா வாக்கிய ரகஸ்யார்த்தகம் ஆகும் ஓர் ஸத்குரு! உணர்த்த, உணர்ந்தால் தான் சாத்தியமாகுமோ?

63



அல்லது வேறுமார்க்கம் ஏதேனும் உண்டா பாமா?

வைத்தியம்:- ஸ்ரீ ஸத்குரு இல்லாமல்


அல்லவே
ஜீவன் முக்தி என்ற பிறவா நிலை இல்லை ருக்மா.

அதுவும், அந்நான்கு மறை வாக்கியங்களுக்கு இணையான வேறுமார்க்கமும்!

உண்டு என அறி பல மறைகள் வாயிலாக அறிகிறேன் ருக்மா.


பாமருக்மா:- அது என்ன வேறுமார்க்கம் பாமா?

வைத்தியம்:- உபநிஷத்துக்களில் மாண்டுக்யமும்! அஷ்டவக்ர கீதையும்! ஞானவாசிஷ்டமும்!



64

வேறு ஒன்றிரண்டு வேதாந்த
சுத்த அத்வைத நூல்களும் !
ஜீவன்முக்தியை தரவல்லது எனகேள்விப்
படுகிறேன் மஹாத்மா.
ஸ்ரீமஹாத்மா :- நாங்கள் கூறும் நூல்களில்
அந்த நான்கு மஹா வாக்கியமும் அடங்குமா??
வைத்தியம் :- நான்கு மஹாவாக்கியமும் அடங்காது
அதன் ரகஸ்யார்த்தம்! மட்டும் அடங்கும்
என கேள்விபடுகிறேன் மஹாத்மா.
ஸ்ரீமஹாத்மா :- ரகஸ்யார்த்தம் என்றால்
என்ன? சற்று விளக்குங்கள் கேட்போம்??



வைத்தியம் :- யாம் கூறும் வேதாந்த

சுத்த அத்வைத நூல்கள் எல்லாமே

நாமரூப ஜகஜீவ /

தோற்றங்களுக்கு இல்லை இல்லை இல்லை

எனகூறி ஒதுக்கி தள்ளிவிட்டு ; அவைகளின்

இருப்புத்தன்மையாகிய

சுத்தபிரம்மத்தை மட்டும் /

அது யாமே என இணைத்துக் கொண்டு

பி..................ன் ?



ஈசனாகிய பரிபூ (66)
ரண மாயா! மாயா!
என ஒட்டு மொத்தமாக
ஒதுக்கி விடுகிறார்கள் கலியுக
பரிமாணங்கள் ஆனால் அவன்
சிருஷ்டியை மட்டும் நான் எனதாக புசிக்கிறார்கள்.

பரமாகிய ஈசன்! நிலயாவ்:
மாயாவையும்! அதன்
காரண காரியங்களையும்!
ஒதுக்கி தள்ளிவிட்டு; சுத்த சைதன்ய (ஈசன)
பிரம்மத்தை மட்டும்!
யாம்யாமாக! இருக்கிறேன் என்ற
ஒன்றை! மட்டும் உடையதாக்கி
ஏற்றுக் கொள்வது நான்கு மறை வாக்கியங்களாகும்.



இது மஹாஅமராதம் (67)
ஆகும் என உணர்க.
ஸ்ரீ பதவானகிய ஈசன்
சுத்த சைதன்யமே ஆகும்.
ஆகவே அவனே ஸ்ரீ பரமாத்மா என்பர் உணர்ந்த
ஸ்ரீ ஞானிகள். ஈசன் ஓர் சைதன்யமே எனஅறிக.

இம் மஹா வாக்கியங்களுக்கு ஒப்பாத!

ஒன்றிரண்டு, அநுகூல!

வாக்கியங்களும்! உண்டு எனக் கூறுவர்

ஸ்ரீமஹாத்மா :- அந்த அநுகூலவாக்கியங்களெது?

எதுயாபா??

ஸைத்தியம் :- (1) பிரம்மம் ஸத்தியம்! ஜகந்

மித்தை. (2) பிரம்மம் ஸத்தியம்!

ஜக, ஜீவ, பரமும், மித்தை. (ஞா)ந்தையது ஜீவநிலை.

ஸ்ரீந்தையது ஈசநிலை! எனவும் கொள்ளவாம்.



அவன் ஜீவர்கள் 68
நிமித்தமாகவும்
உலக இயக்கத்திற்காகவும்
மாயாவை தாம் பற்றிக் கொண்டு
எதிலும் பற்றப்படாமல் விளையாடுகிறான் ஆகவே
அவன் சைதன்யமாகிய ஆன்மாவே. மாயையல்ல.

ஜீவ நிலைக்கு மற்றோர் வாக்கியமும் உண்டு

ஓ ஸங்கல்பமே உலகம். ஸங்கல்ப
ரஹிதமே மோக்ஷம்.

ஓரஸ் அன்பான மஹாரகமான! இம் மூன்று

அநுகூலவாக்கியங்
களும்! நான்கு மஹாவாக்கிய
மற்றைய வேதாந்த சூத்த

அந்நிலை தத்துவங்களை உணர்த்துவதால் அவை
களையும்! ஜீவன் முக்தியை பெற முடியும்.
ஆனாலும் ஸத்குரு தேவை என உணர்க.



மாயாவை உடைய ஈசனின் கருணை இல்லாமல் எவரும் ஜீவன் முக்தி பெற முடியாது என்பது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்.

69

ஆகவே இன்றுள்ள கலியுக வேதாந்திகள் கூறும் ஸ்ரீமகமாயா மாயாவை நன்றாக நம்ப வேண்டாம்.

ஸ்ரீ மஹாத்மா — தாங்கள் கூறும் கருத்தை நோக்கும் போது, ஜீவர்களை மட்டும்

ஜீவோபாதையை மட்டும்

நாசம் செய்தால் போதுமே பாபா.

ஈசஐக்யபரம்! எந்த வி[illegible]டியும்?

பிரம்மமாகத்தானே இருக்கிறது பாபா?

ஸத்தியம் — உண்மைதான் மஹாத்மா.

ஈசனை! பற்றிய எண்ணம் நமக்கு

தேவை இல்லைதான். ஆனாலும் அந்த ஈசனுடைய

படைப்பை நான்/எனதாக! நாம்




70

நம் ஆத்ம பக்குவம்
பரம் நிலைக்காக
மட்டும் ஈசனை ஸ்ரீகுருவாக
பாவனை செய்து சர்வார்ப்பணம்
செய்ய வேண்டும். ஈசன் சக்தி நம்மை
நாசமாகும் நிலைக்கு
ஈசனையும் ஸ்ரீ சத்குருவாக உணர்ந்து அவரிடம்
ஆத்மார்ப்பணம் செய்ய வேண்டும் என அறிக.

புசித்து விட்ட தன்மையால் அறிந்தும்
அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும்
அனுபவித்து விட்ட தன்மையால் மாயாவை
உடைய ஈசனின் தயவு நமக்கு அவசியம்
வேண்டியிருக்கு என உணர வேண்டும்.

ஆகவே ஈசனை நம் வினை நாசமாகும் வரை
நம் உபாசனை மூர்த்தியாகவும்
நாட வேண்டும் நம்மனம்
மறைத்தாலும் நிலைக்கு குருவாகவும் பாவனை பண்ண வேண்டும்.

71



இது சர்வார்ப்பணம்! ஒன்றுதான் முடியும்.

அந்த ,, பூர்த்தி ஆகும் நிலையில்

அந்த க்ஷணம் நாமும் ஒன்றாகி விடுவோம்.

ஸ்ரீமஹாத்மா :— உணர்ந்து கொண்டோம் பாபாஜீ!

ஆதலும், அம் மூன்று அநுகூல வாக்கியங்களுக்கும்!

உள் ஆழ்ந்த தெளிநிலை விளக்கம்

வேண்டும் பாபா?

வைத்தியம் :— அதுதான் ஸ்பஷ்டமாக!

தெரிகிறதே மஹாத்மா!!! இன்னமும் விளக்கம்

தேவைதானா மஹாத்மா!!!



ஓ மித்தை என்றால் (72)
பொய் எனப்
பொருள்படும் அதாவது
எல்லாம் மண்ணாகிய
பிரம்மம் தான் என்று உணராத
தன்மையால் நாமரூபமே தோன்றுவதால்
பொய்யெனக் கூறப்படுகிறது. என உணர்க.


ஸ்ரீமஹாத்மா :- ஸ்ரீ வஷிஸ்டர் வாக்கால்

பிரம்மரிஷி பட்டம் பெற்ற ஸ்ரீ
விஸ்வாமித்திரர் போன்று, உம் வாயால்
ஒன்றிரண்டு விளக்கம் வந்தால் போதும் பாபா.
அதனை நாங்கள் ஸ்வய அனுபவம் பெறமுடியும் பாபா.

வைத்தியம் :- சிரித்துக் கொண்டே தவளைத் தேரை

மஹாத்மா.
1) பிரம்மம் ஸத்தியம், ஜகத் மித்தை.

இருக்கிறது என்ற ஓர் இருப்பை
மட்டும் உடையது, தானாகிய பரமாகிய பிரம்மம்.



உதாரணத்திற்கு!

உ ண் மை ய ல் ல்

மண்ணே! பிரம்மம்! பிரம்மமே! மண்!

ஜகத்! மித்தை! என்றால் ஜகம் பொய்!

ஆ ooooooooooo ஹ oooooooooooo ஸ்?


பொய்யாகிய ஜகம் வெறும் ஜடமே!

இந்நிலையாலும் ஜடம் ஜகம் மண்ணே, பிரம்மமே!

ஐ பிரம்மம் ஸத்தியம்! ஜக, ஜீவ, பரமும் மித்தை!

இருக்கிறது என்ற ஜீர்! இருப்பை

மட்டும் உடையதாகு காவாது பிரம்மம் இருக்கிறது.



மற்றும் ஜடசொரூப / பரசொரூப

ஜகமும் மண்ணே / பிரம்மமே

நாமரூபஜீவசொரூபம் / அனைத்தும்

மண்ணாகிய பிரம்மமே /

சைதன்யத்துடன் மாயா / கலந்தால் அது


பரமாகிய ஈசன் / ஆகும் என அறிக.

சைதன்யத்தை விட்டு மாயா அகன்று விட்டால்

சைதன்யம் / பரமாகிய /

பிரம்மம் / ஆகிவரும் என அறிவால் உணர்க.

இந்நிலையாலும் இந்த அநுகூல வாக்கியமும் மறை /
வாக்கிய நிலை பெறுகிறது என உணர்க.



3 ஸங்கல்பமே உலகம்! ஸங்கல்ப ரஹிதமே

மோக்ஷம்! என்ற ஜீவன் முக்தியாகும்.

அந்த எண்ணம்! நாமரூப கல்பனை செய்தால்

ஓர் (தோற்றமாகி)

ஜக, ஜீவ, தோற்றம்! தோற்றும்.

இந்த குற்றமான! நாம ரூப கற்பனையை

நாசம் செய்து (மனோ நாசம் செய்து)

அறிவின் ஸத்தான பாவனையை

உணர்ந்து அதுவேயாம்! யாமே அதுவே

ஆதிஷ்டால் போதும். ஜீவன் முக்தியே. இது ஸத்தியம்.



76

பட்டகுச்சியாகிய கோடு
சொந்த பந்த பாச பிணைப்பு
அறுபடாதிருந்தாலும்
தீர்த்துக்க நிலையில் இருந்தும்
உதவாத உதவ முடியாதநாளும்.
நடை தளர்ந்தவரை மட்டும் சுற்றுதாங்கும் சக்தி உடையதாகும்.
வேறு எதற்குமே பயன் படாது ஒன்றுக்கும்.

இம் மூன்று அநுகூல வாக்கியங்களுக்கும்
ஓர் ஸத்குருவின் துணையுடன்
சென்றால் மட்டுமே ஜீவன் முக்தி!
பெற முடியும் என பரிமளாவான்கள் வாயிலாக அறிகிறோம்.

பரிமளாத்மா:- சற்று அழுத்திச் சொல்லுங்கள் பாமா.

வைத்தியம்:- இயலாத தன்மையே
ஞானத்தின் அஸ்திவாரம் ஆகும்
அ...... தா...... வ...... து?
வீடு/போ/போ/ எனத் தள்ளும் நிலையிலும்;
சுடு காடு/வா/வா/ என கொள்ளும் நிலையிலும்



இயலாத்தன்மையில் 77
வயோதிகத்தில் மட்டும்
ஓர் ஊன்றுகோல் தேவை.
அவ்வியலாத்தன்மையே
ஜீவன் முக்தி நிலை அளிக்க.
அங்கு ஓர் ஸத்குரு இல்லாமல் நடைபயணம் செய்ய
எவராலும் முடியாது என்பதே ஸத்தியம்.

ஓர் கோல் பட்டகுச்சி
உனக்கு உறு உயிர் துணையாகும்,
அ.....தா.....வ.....து?
உன் சாதனையால், உன் கருவிகள் &
தளர்வு
கரணங்கள், செயல் இழந்து அயர்வு சோர்வு
அடையும் தருணம், ஓர் பட்டகுச்சியாகிய,
கோல், ஸத்குரு ஜீவன் முக்தி நடைபயணத்திற்கு
உயிர் உறு துணையாய் அமையும் என
உணர்வால் உணர்க. எனவே இவ்விதழை நிறைவு
செய்கிறோம்.
இருப்பது ஒன்றே.
நடப்பது நவமே.
த பாபா.



ஹிமாலயாவிலிருந்து வந்த ஸ்ரீ மஹாத்மா

78

உலகம்! தெய்வம்! பரசொரூபம்! இவைகளில் சாதனை வகைகளை எவ்வாறு? எந்நிலையில்?

பழுத்த வழக்கத்தில் இருந்து வேறுபடுத்து கேட்டார்?

# ① உலகம்! ② தெய்வம்! ③ ஞானம்!

லௌகீகம். தெய்வீகம். பரமார்த்திகம்.

உலக நிலையில் (பந்தப்பட்ட நிலையில்) இருக்கும் நீ அதாவது மனை நிலையில்! இயங்கும் நீ உலகை எதிர்த்து போராடக் கூடாது என உணர்க.

மனதளவில் வளைந்து நெளிந்து கொடுக்க வேண்டும்.

அறிவின் நிலையில் ஸ்ரீ பகவானுடன் இணைய வேண்டும்.

ஞான (அத்வைத நிலையில்) ஸ்திரமாக (சந்தேக கலக்க பயமில்லாமல்) இருக்க வேண்டும்.



லௌகீகத்திற்கும்! பரமார்த்தீகத்திற்கும்!!

இடையே! தெய்வீகம் இருக்கிறது, என்பதை மறவாதே!

ஆகவே தெய்வீகத்தை தொடு! அவன்

ஸ்ரீ பகவான் நாம்! ஆதி! அதாவது

தெய்வீக குணநயவத்தை நாம் பெற்று

தெய்வம் நாம்! நாமே தெய்வம் என ஆகாமல்

பரமார்த்தீகமான ஜீவன் முக்தி பெறமுடியாது.

நாம் தெய்வம் ஆகவேண்டுமானால், தெய்வீக குண தோஷ போராட்டம் கூடவே கூடாது

பணிந்து! குனிந்து! வளைந்து! நெளிந்து! செல்! உன்னால் முடியும்.



பொறுமையால் சகித்தல் 80

வளர்ந்தகிளை

நமெறும்! வாரும்!!

மறந்தகிளா!

வராது. மறந்தால் இருக்காது. இருக்க முடியாது.

அதாவது குடும்பம்! தொழில்! உறவுசுற்றம்!

இவைகளில் வளர்ந்த கொடுக்க வேண்டும்.

,, ,, காக்கா பிடிக்க வேண்டும்.

,, ஆமாம்சாமி போட வேண்டும்.

லௌகீகத்திற்கும்! பரமார்த்தீகத்திற்கும்!

அத்வைதத்திற்கும் இடையே!

தெய்வீகம் இருக்கிறது என்பதை மறவாதே.

லௌகீகத்திற்கு அனேக குணங்களாகும்.

தெய்வீகத்திற்கு ஏகத்துவ குணமாகும்.



81

அதைப் போல்?
வாழ்வாலும்
பணிந்து, வளைந்து.
நெளிந்து, சகித்துக்கொண்டால்
உலகநியதியால் உன் வாழ்வு மட்டும் உனீ ஒருவனுக்காக
மாற்றியமைக்கப்படும் அவசியம்.

லௌகீகம் மனதோடு கூடியது. தெய்வீகம் அறிவோடு கூடியது. உன் மனதால் அதை குணங்களோடு

# பழகிவிட்டாய் அறிவால்

# ஸத்வகுணத்தை

ஏற்றே ஆக வேண்டும்.


# அ... ப்... ப... டி... யா... னா... ல்

# நாமரூப

உலகைவிட்டே ஆகவேண்டும்.

அதாவது வாக்காலும், செயலாலும், வாதமும், பிடிவாதமும், தர்க்கமும், குதர்க்கமும் கொண்ட நாமரூப ஜகஜீவ தோற்றங்களுடன் பழகும்

# நீ!



இங்கு உலகம் என்பது

82

மாயா!

காரியமாகும் என உணர்க.

திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்ற நிலை வெற்றிடமாம் என உணர்க.

விட்டுக் கொடுத்தே ஆகவேண்டும்.

வளைந்து " " .

காக்கா பிடித்தே " " .

ஆமாம்சாமி போட்டே " " .

பொறுத்து சகித்தே " " .

மேலே கூறியவைகளை நீ ஏற்கும் போது தான்

இவன் இங்கு வாழ கதி அற்றவன் என

உன்னைப் பட்டும் ஒதுக்கி வைத்துவிடும் இவ்வுலகம்.

இவனுக்கு ஏது தேவை? என உலகம் ஆராயும்???

83



உலகம் இல்லை என்பதில் வைராக்யம் வேண்டும்.

அது நாம்! நாமே அது! என்பதில் பரிபூரண வைராக்யம் வேண்டும்.

செயலற்றவனுக்கு "பரமே" உரியது என உனக்கு! அவனை செய்யும் இவ்வுலகம் என்ற பரத்தின் மாயா! என உணர்க.

வாதம் அபிடிவாதம்! தர்க்கம் & குதர்க்கம்!! இவைகள் சொல்லிலும் செயலிலும் இருந்தால் மட்டும்!

உலக இனிமையை காட்டி மயக்கும் இவ்வுலகம். மறந்தால் மட்டும் உலகம் ஒதுக்கி ஒதுங்கி உன்னை விட்டு விடும். நாம ரூப ஜகஜீவ தோற்றங்கள்! நாசமான மறு விநாடி அது நீயே! நீயே அது அது ஸத்தியம்.

தஞ்சை பாபா.




நீயே கூறியதனைத்தும்
ஒவ்வொன்றாக
கேட்கத் தேவை இல்லை
எல்லாம் நீயே என்றால் அவை
அனைத்தும் உன்னை விட்டு அகலும்.

84


மானம் & ஈனம் / மதிப்பு &
மரியாதை / சூடு & சுரணை /
வெட்கம் & லஜ்ஜை /
அவமானம் & கூச்சம் /
இவை அனைத்தும் !!!!!
கலியுக வாழ்வின் / குணங்கள் ஆகும்.

(இறை & குரு)
நம்பிக்கை & வைராக்கியம் என்ற நிலையில். இரு
கரங்களையும் உயர்த்தி அபயம் கேட்ட நிலையில்;
எல்லாம் நீயே! எல்லாம் நீயே!! எல்லாம் நீயே!!!
என அவரை அழைத்தால் எல்லாம் நலமாய் முடியும்
தலைபாபா.



86

திருஅண்ணாமலை! அன்பர் ஓர்
திருஆலவாய்! களின்!
மனசலனத்தால் வந்த கேள்வி????
குருதேவா! கண்ணால் காணும் உலகை பொய்!
என சொல்கிறீர்கள். கண்ணால் காணா இறைவனை!
மெய்! எனச் சொல்கிறீர்கள். இது
மனோ நிலையில் குழப்பம் தான்.
அறிவிலை! வேறுவழியின்றி
ஏற்றுக்கொள்கிறோம்.
இதன் விளக்கத்தை மனதால்!



46

அறிந்துய்யும் நிலைக்கு சற்று விளக்கம் கொடுங்கள் பார்ப்போம் ???

பதில் :- நல்லபயனுள்ள கேள்வியே.

உன் மனதை நீயே கேட்டுப்பார்?

" கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும், வாக்கால் விளங்க வைத்தும், இதுதான் என தொட்டுக் காட்டியும்; அது, இது என சுட்டிக்காட்டியும்; நீ காணும் இந்த, நாமரூப, சொந்த பந்த ஜீவதோற்றமும் பண்ட, பாண்ட, ஆவரணைம், மற்றும் போறு



விளையாட்டு (87)
என்பது நாமரூப
வஸ்துக்களுக்கிவம்
விதி விதியால்
சித்தி; நான் எனதினால்
விளையாடு மனதிற்கே,
என உணர்க. மற்றும் அனைத்தும் அறிவற்ற
ஜடசொரூபமே என அறிக.

போக்கிய வஸ்துக்களும் எல்லாம்

வந்து, இருந்து, விளையாடி, மாறி, மறைந்து

ஐந்தொழில்களையும்!

செய்து,

எவரிடமும், எதனிடமும் காரணகாரியமாய் காணாமல் மூடி வி


மண்ணாகி, தாஸிஆகி, அணுவாகி, ஆத்மாவாகி

பரமாத்மாவாகி, பரப்பிரம்மமாகி விடுவதை

உணரமுடிகிறதா குழந்தைகளே???

கேள்வி:- உணர்கிறோம் குருநாதா.

பதில்:- அதில் விளையாடுகிறதே



௮௮

வரும் ஒருவார்த்தையை மட்டும் கவனிக்கவும்.

# மனதின் / வினைவிதியால்

வருவதே இந்த விளையாட்டாகும் என அறிக.

விளையாடும் ஜீவனும் நிஜமல்ல.

,, பொருள்களும் சுதமல்ல.

விளையாட்டும் உண்மையல்ல.


விளையாட்டினில் பெறும் அனுபவமும்

அதாவது இன்பதுன்பம், சுகதுக்கம்,

நன்மைதீமையெனவரும், இருமைகளும்!

# நிரந்தரமல்ல!

என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?





கேள்வி :- ஏற்றுக் கொள்கிறேன் குருநாதா.

பதில் :- கனவில் காண்பது பகலில் இல்லை.

பகலில் காண்பது கனவில் இல்லை. இவ்விரண்டும்

ஆழ்ந்த உறக்கத்தில் இல்லை.

இன்ப துன்பமும் நிலையாயிருப்பதில்லை.


சொந்த பந்த உறவும் ,, .

பொன் பொருள் போகமும் ,, .

எந்த நாம ரூபமும் ,, .


வாழ்வும், தொழிலும், பணமும், ,, .

இவைகள் எல்லாமே மாயமாய் முடிவில் மறைகிறது.





இம் மாற்றத்தால் எதிர் பார்ப்பும்!
ஏமாற்றமும்! அதனால் மனதடுமாற்றமும்!
அதனால் வினைப் பெருக்கமும் தானே உண்டாகிறது!
ஆனால் இறை & குரு உணர்வு
மட்டுமே காட்சிக்கும் நிகழ்ச்சிக்கும் எட்டா
சூட்சும நிலையில் நாம் நாமாய் இருந்து கொண்டு
புற உணர்ச்சியை கெடுத்து, அக உணர்வை கொடுத்து
உன் அஹந்தையை நாசம் செய்து.



91

சுகானந்தசகஜவாழ்வை!

உண்டுபண்ணிவிடுகிற தேகுழந்தைகளே!

வினைவிதி! வசம் கொண்ட இவ்வாழ்வு

காலகதியினை! நாசம் ஆன

மறுவிடை! சொல்லவொண்ணா,

விளக்கவொண்ணா, சகஜானந்த!

நிலையை வென்றுவிடுவீர்களே! வென்றுவிட்டீர்களே!!

என உரைத்துக் கொண்டே அக்குழந்தைகளை நோக்கினேன். அக்குழந்தைகளை காணோம். சகஜ சமாதி நிலை வென்று விட்டார்கள் என அதை நிறைவு செய்கிறேன்.

இருபத்து ஒன்றே.

நடப்பது நலமே. ஸ்ரீ பாபா.



சேவை சேவையாக இருக்க வேண்டும் வேலையாக இருக்க வாகாது. இங்கும் சந்தேகமும் பயமுமே அவன் எதிரியாகும் என உணர்க. உறுதியின் நம்பிக்கையே அவன் துணையாகும்.

92

அத்வைத ஸ்வய அனுபவ பாடத்தில்
சிரத்தை உள்ளவனுக்கு சேவை செய்ய இயலாது.
காரணம் நாமரூபங்கள் மறந்து விடுகின்றன.
அங்கு நாம ரூபம், குணம் குறி! மறந்து நாசம்
அவதானம் மனமும் வினையும் ஏகாந்தத்தில்
நசிக்கிறது. ஆகவே அவன் ஜீவன்முக்தனே!
சேவையில் முழுமையாக ஈடுபடுபவனுக்கு
பாடம் கேட்கவும் ஸ்வய அனுபவம் பெறவும் இயலாது.
சேவையினால் வினை நாசமாகிறது. மனம்
நசிக்காது பரிபாகப்படும். பரிபாகப்பட்ட
மனம் ஸ்ரீ சத்குரு தீக்ஷண்ய பார்வையினால்
சாம்பல் ஆகிறது. அவனும் ஜீவன்முக்தனாகிறான்.
இவ்விருவரும் பயப்படத் தேவையில்லை. இங்கு
பயமே பாதகம் என உணர்க. — த[illegible] பாபா.



இக்கலியுகத்தில்
ஓர் சாதகனுக்கு
இவ்விரண்டையும்
இணைந்து செய்வதற்கு
மனோ/பலமும்
காலம்/ " இல்லை
யெனில் அதை முன்னிட்டு. ஏதேனும் ஒன்றை செய்
தாலே போதுமென நினைக்காமல் ஆக்கிக் கொண்டு
எனஅறிக.

93

சேவையும்/ அனுபவபாடமும்/

சேர்ந்து அமைய தேவையில்லையென்றும்;

ஏதேனும் ஒன்றே ஜீவன்முக்திக்கு போதுமென்றும்; இது வே

கலியுக தர்மத்தின் விதி& நியதி/

என்றும் ஸ்ரீ மஹான்களின் வாக்காக அறிகிறோம்.

இவ்விரண்டும் சேர்ந்து அமைவதென்றால்???

பூர்வசுகிர்தம் அதீதமாகவும்/

அதி அதி அதிகமாக இருக்க வேண்டும். அல்லது/

அவன் ஓர் அவதார புருஷனாக/

இருக்க வேணுமென்றும் ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

திரு பாபாம்



ஸ்வய அனுபவம் பெற்று அது நாம்! நாமே அது!

94

என்றறிவு பெற்றுவிட்டால் இந்த நாமரூப குணதோஷங்கள் உனக்குத் தோன்றுது மறைந்துவிடும். அங்கு நீ!

ஓர் முக்கிய உணர்வு!

ஸ்ரீஸத்குருதேவரை மட்டும் த்வைதமாக நாமரூபமாக (அவரை) காண வேண்டும். அத்வைதமாக பரசொருபமாக உணர வேண்டும்.

காண்பது த்வைதமாகும். உணர்வது சைதன்யமாகும்.

(மனக் கண்கள்) (அறிவுக் கண்)

அப்படியானால்தான் சேவை செய்ய முடியும். பாடம் கேட்டு அனுபவம் பெறவும் முடியும்.

95



உனைத் தன்னியலாய் எவரையும் எதையும் நீ காண முடியாது. உன்னை நீ காண்பாய்.

உன் ஸத்குருவை உன் கண்களால் காண முடியாது. அவரை உன்னைத் தன்யமாகவே கண்டுணர்வாய் உன்னை நீயே காண்பது போல்

அவரே ஸத்குருவே நாம் என்றும் நாமே அவர் என்னும் எண்ணம் வந்தால்; அது பாவின அவ்வழமைய கற்பனை ஆகும்.


நாமும் அவரும் ஒன்றேஎன்றால்

சேவை செய்வது யாரிடம்???

பாடம் கேட்பது எவரிடம்???

இவ்விரண்டினையும் ஸ்வய அனுபவம் பெறுவது எப்படி??? எங்கே??

உன் ஆழ்ந்த உணர்வீர்களாக.



நம்பினோர் 96 கெடுவதில்லை என்ற வாசகமும், யத்பாவம் தத்பவதி! என்ற வாசகமும் சேவைத்துறைக்கு பாடத்திற்கும் பொருந்தும் என்பதை உணர்க.

பாடம் கேட்பவனுக்கு ஏன் சேவை! செய்ய இயலாது என்றால்? அவன் மனம்! பக்குவப்பட்டு விட்ட தன்மையால் எல்லாம் ஒன்றே! என்ற உணர்வைப் பெற்றுவிடுகிறான்.

(மனோ நாசம் சந்திக்கிறது)

அவ்வுணர்வானது அவன் வினையையும் நாசம் செய்துவிடும்.

சேவை செய்பவனுக்கு ஏன் பாடத்தில்! சிரத்தை இல்லாது போய்விடுகிறது என்றால்???

சேவையால் அவன் வினையானது பரிபாகப்பட்டு விடுகிறது. (உலர்ந்து விடுகிறது.)



97

பாடம்:- நான் என்னை
நாசம் செய்து;
அதுவே யாம்! யாமே அது! என்று
ஸ்வய அனுபவத்தில் இரு.
சேவை:- நான் எனதற்று, முற்கவ
னம்! வியாபாரம் இல்லாத தற்கவனத்தோடு இரு.

வினை பரிபாகப்படும் போது, அதை தேடிய
மனம்! ஸத்குரு
கடாக்ஷ பார்வையினால் அந்த ஒன்றே
நீ! என்ற உணர்வினால் மனம் சாம்பல் ஆகிவிடுகிறது.
சேவையோ? அத்வைத பாட அனுபவமோ?
ஓர் ஸத்குருதேவரிடம் பெற்றால்தான்;
ஜீவன்முக்தி பெறமுடியும் என உணர்.
சாமான்ய குருவிடம்! அவ்விரண்டும்
கிடைக்கப் பெற்றால்; பாடத்திற்கும், சேவைக்கும்!
தக்க பலன்! கிடைக்குமேயன்றி ஜீவன்முக்தியல்ல
என உணர்க.

திருப்பதம் ஒன்றே
நடப்பது நலமே.

தத்தே பாபா.

98



மாற்றக் காட்டுவான்

யாமே! அவ் வேடம் அணிந்து கொண்டு உன் வினை விதியின்படி ஆடிக் காட்டுகிறேன் என மாற்றிக் காட்டுவான்.

காண்பதையும் கேட்பதையும்! மறுக்கப் பழகு. மாற்றிப் பழகு! மறந்து பழகு.

ஒருவன் உனக்கு தீமை செய்தால்! அல்லது வேறு சிரமம் கொடுத்தாரோ? அவர் அடித்தாரோ?

இவன்! செய்யவில்லை. அவன் செய்கிறான் என்று உன் உபாசனை மூர்த்தி மீது அசைக்க முடியாத நம்பிக்கையுடன்! சந்தேகம், கவலை, பயமில்லாமல் இருந்தால் மறைவிடை! இவ்வகை அனுபவத்தை அவன் ஸ்ரீ பகவான் மாற்றிக் காட்டுவான்.

இது இவ் வேழையின் அனுபவமாகும்.



மாயா! 99

ஒன்றே நாமரூப சர்வ ஜகஜீவ தோற்றங்களாக இருக்கிறதை உணர்க.

எப்படி என்றால்???

அவன் (அச்ஜீவன்) அவனைக் காணவில்லை.

"ஜீவகவானைக் காண்கிறான்." அவனைக் காண்கிறான்.

யத் பாவம் தத் பவதி

என்ற அறிவின் பாவனை நிலையால்

இவ்வுலகம் அமைந்தே ஆகவேண்டும்.

உண்மையை கற்பனையாலேயே! இவ்வுலகம் மாற்றமாய் அமைக்கப்படுகிறதை, ஸத்தியமாக உணர்க.

குருபயா.



நீ ஸ்ரீ பகவானை
சரணடைந்தால்
மாயா!
உனக்காக ஆவன
செய்யக் காத்திருக்கிறு

100

தென ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறேம்

அறிவின்! ஸ்ரீ பகவானின்
பாவனையே! இவ்வுலகை
ஆனந்த மயமாக்கும் எனை அறிக.
கலக்க,
மனதின் சந்தேகப்பய,
கற்பனையே! இவ்வுலக
இன்பதுன்ப புண்ணிய
பாபத்தின் ஜனனமரண கற்பனையாகும்.

ஸ்ரீ பாபா.




101


குற்றம் குறை எமக்கில்லை என நீ ஒதுங்கும் போது அதை தாங்கும் பொறுமையையும் தாமே ஏற்றுகொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

அவனை பகவானே இவ்வேஷம் போட்டுக்கொண்டு, வினைவிதியின்! படி நடக்கிறான்! என மாற்றிப் பழகு. அதனை வினையின் பாதிப்பு உன்னைப் பற்றுதொழியும்.

அவன் அச்சீவன் இவ்வாறு செய்கிறான் என்பதை மறக்கப் பழகு! அதனை அவன் தோஷ குணங்கள் உன்னைப் பற்றுதொழியும்.

அவன் அச்சீவன் இவ்வாறு செய்துவிட்டான் என்பதை மறந்து பழகு!! அதனை

பகவானின் மாயா! வினை விதியை முன் பின் மாற்றவும் நன்மை தொகுமைகளை குறைக்கவும் செய்யும்.



கண்காணிக்கும் (102)
எண்ணிலி:
உன் வினையையும்;
அவன் ,, ;
சரிபார்க்கும். பாரபட்ச
தோஷமில்லாமல்; வினை
தொடராமல் முடித்து வைக்கும் என அதிசய

கண்காணித்துக் சாட்சியாய் பார்த்துக்
கொண்டிருக்கும் மறிபகவானின் மாயாவுக்கு
உன் சர்வார்ப்பணத்திலே!
உன்னை பற்றுநீக்கி இவ்வகை
உனி பார்வை வைக்கும் மட்டுமே
உன் ஒருவனுக்காக!
மாற்றி அமைக்கும்! திறமை உன்னுடையது என்பது
சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!
அங்கு சொல்வாயும், செய்வாயும், நீ இறந்து விடுவாய்!!!
இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே!

த உ பாபா.




Abode of Love

You Are Everything!